# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2273/04 - 2022 මාර්තු මස 28 වැනි සඳුදා - 2022.03.28

*2273/04 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 9/2016* (III)

**2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம்**

*2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 142 ஆம் பிரிவின்கீழ் சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

கலாநிதி **கெஹெலிய ரம்புக்வெல்ல,**
*சுகாதார அமைச்சர்.*

கொழும்பு,
*2022, மாச்சு 28.*

**ஒழுங்குவிதிகள்**

*2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதிய 2114/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளின மூலமும் 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆந் திகதிய 2241/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் மூலமும் திருத்தப்பட்டவாறாக, 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதிய 2006/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மருத்துவ உபகரணங்கள் விலைகுறித்தல் ஒழுங்குவிதிகள் இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன:-*

*(1)* அதன் 2 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"2. (1) இதற்கான அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட வணிகப் பெயரினால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பெயரினால் விவரிக்கப்பட்டவையும் அவ்வட்டவணையின் நிரல் III இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய உற்பத்தியாளரினால் உற்பத்தி செய்யப்பட்டவையும் (இதனகத்துப்பின்னர் "அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றவையுமான) மருத்துவ உபகரணங்களின் அதிகபட்ச சில்லறை விலையானது, இதற்கான அட்டவணையின் நிரல் IV இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.";

(2) அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களை உடைமையில் வைத்திருக்கின்ற ஓர் உற்பத்தியாளர், இறக்குமதியாளர், வியாபாரி, வழங்குநர், விநியோகிப்பாளர், மருந்தாளர், மருத்துவத்தொழிலர், ஒரு தனியார் மருத்துவ நிறுவனமுட்பட்ட மருத்துவ நிறுவனம், மருந்தகம் அல்லது ஆள், அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலைக்கு மேலாக அல்லது ஒழுங்குவிதி 3(2) இன் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்படக்கூடியவாறான மீளாய்வு செய்யப்பட்ட சில்லறை விலைக்கு மேலாக அத்தகைய அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களை விற்பனை செய்தலாகாது, விற்பனைக்கு முனைதலாகாது அல்லது அவற்றுக்காக விதிப்பனவு செய்தலாகாது.';

*(2)* அதன் 2 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் புதிய ஒழுங்குவிதியை உட்புகுத்துவதன்மூலமும்:-

"3. (1) விற்பனை நோக்கத்துக்காக அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களை உடைமையில் வைத்திருக்கின்ற ஒவ்வொரு வியாபாரியும், வழங்குநரும், விநியோகிப்பாளரும், மருந்தாளரும், மருத்துவத்தொழிலரும், ஒரு தனியார் மருத்துவ நிறுவனமுட்பட்ட மருத்துவ நிறுவனமும், மருந்தகமும் அல்லது ஆளும், அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களின் விலையை அதிகபட்ச சில்லறை விலையில் அல்லது மீளாய்வு செய்யப்பட்ட சில்லறை விலையில், இவற்றுள் எவ்விலை குறைவாகவுள்ளதோ அவ்விலையில் பேணுதல் வேண்டும்.";

(2) இவ்வொழுங்குவிதிகள் வெளியிடப்படும் திகதியன்று, இதற்கான அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலைக்குக் குறைவாகவுள்ளதும் 2021 ஆம் ஆண்டு ஓகத்து 19 ஆந் திகதிய 2241/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மருத்துவ உபகரணங்கள் (விலைகுறித்தல்) ஒழுங்குவிதிகளின் கீழானதுமான மீளாய்வு செய்யப்பட்டவொரு சில்லறை விலையில் எவையேனும் மருத்துவ உபகரணங்களை விற்பனை செய்கின்ற ஓர் உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர், மொத்தமாக இருபத்தொன்பது சதவீதத்தினால் (29%) அத்தகைய மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறை விலையை விகிதாசாரப்படி அதிகரிக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களின் மீளாய்வு செய்யப்பட்ட சில்லறை விலையின் அத்தகைய அதிகரிப்பு, இதற்கான அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையை விஞ்சுதலாகாது.';

*(3)* அதன் 4 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"4. எவரேனும் உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர், அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களின் வர்த்தகப் பொதியின்மீது அல்லது சுட்டுத்துண்டின்மீது, உற்பத்திசெய்யப்பட்ட அல்லது சந்தையில் கிடைக்கக்கூடியதான

கையிருப்பில், இயன்றளவு விரைவாக, இதற்கான அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையை அல்லது மீளாய்வு செய்யப்பட்ட சில்லறை விலையை, இவற்றுள் எவ்விலை குறைவாகவுள்ளதோ அவ்விலையை அச்சிடுதல் அல்லது குறியிடுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அதிகபட்ச சில்லறை விலை அல்லது மீளாய்வு செய்யப்பட்ட சில்லறை விலை, இவற்றுள் எவ்விலை குறைவாகவுள்ளதோ அவ்விலை, இவ்வொழுங்குவிதிகள் வெளியிடப்படும் திகதியிலிருந்து நாற்பத்தைந்து நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதி முடிவுறுமுன்னர் அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களின் வர்த்தகப் பொதியின்மீது அல்லது சுட்டுத்துண்டின்மீது அச்சிடப்படுதல் அல்லது குறியிடப்படுதல் வேண்டும்.";

(4) அதன் 5 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"5. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபைச் சட்டத்தின் 131 ஆம் பிரிவின்கீழ் விளங்கப்படற்பாலவராதலும் வேண்டும்.";

(5) அதன் 6 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"6. விற்பனை நோக்கத்துக்காக அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களை உடைமையில் வைத்திருக்கின்ற உற்பத்தியாளர், இறக்குமதியாளர், வியாபாரி, வழங்குநர், விநியோகிப்பாளர், மருந்தாளர், மருத்துவத் தொழிலர் ஒவ்வொருவரும், ஒரு தனியார் மருத்துவ நிறுவனம் உட்பட்ட மருத்துவ நிறுவனம், மருந்தகம் ஒவ்வொன்றும் அல்லது ஆள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு சில்லறை விற்பனை நிலையத்திலும் அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களின் அதிகபட்ச சில்லறை விலையை அல்லது மீளாய்வு செய்யப்பட்ட சில்லறை விலையை, இவற்றுள் எவ்விலை குறைவாகவுள்ளதோ அவ்விலையை வெளிக்காட்டிவைத்தல் அவரது அல்லது அதன் கடமையாதல் வேண்டும்.";

(6) அதன் 6 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் புதிய ஒழுங்குவிதியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"6அ. அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களின் ஏதேனும் வணிகப் பெயர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பெயர் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களின் அத்தகைய வணிகப் பெயரின் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பெயரின் அதிகபட்ச சில்லறை விலை இதற்கான அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்படாதவிடத்து, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை, அத்தகைய வணிகப் பெயரில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பெயரில் அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களுக்கான விலையை நிர்ணயித்தல் வேண்டும்.";

(7) அதன் 7 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

'7. இவ்வொழுங்குவிதிகளில் -

"மருத்துவத்தொழிலர்" என்பது, (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"ஆள்" என்பது, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஏதேனும் ஆட்கள் குழுவை உள்ளடக்கும்;"; அத்துடன்

"தனியார் மருத்துவ நிறுவனம்' என்பது, 2006 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவுசெய்தல்) சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.";

**அட்டவணை**

(ஒழுங்குவிதி 2)

**கண்வில்லைகள் /டெலிவரி சிஸ்டத்துடன் கூடிய வில்லைகள் (பிறிலோடட் /காட்ரிச்சுடன் வழங்கப்பட்டவை)**

| நிரல் I | நிரல் II | நிரல் III | நிரல் IV |
|---|---|---|---|
| | வணிகப் பெயர் /அங்கீகரிக்கப்பட்ட பெயர் | உற்பத்தியாளர் | அதிகபட்ச சில்லறை விலை அசிவி (இரு) |
| 1. | அக்கிறிசேர்ட் பிறிலோடட் டெலிவரி சிஸ்டம். | அல்கொன் | 27,348.00 |
| 2. | அக்கிறிசொப் IQ SN60WF காட்றிச்சுடன் | அல்கொன் | 26,378.44 |
| 3. | டெக்னிஸ் I பீஸ் | அபொட் மெடிக்கல் | 26,055.03 |
| 4. | என்விஸ்டா | போஷ் மற்றும் லொம்ப் | 24,930.15 |
| 5. | டெக்னிஸ் மொனோபோக்கல் | அபொட் மெடிக்கல் | 24,930.15 |
| 6. | ஹோயா ஐசேர்ட் 251 | ஹோயா | 19,474.49 |
| 7. | நிடெக் நெக்ஸ்-லோட் சிஸ்டம் SP SZ-1 | நிடெக் | 19,474.49 |
| 8. | அக்குவா சென்ஸ் ஆரிஸ் | அறன் சயன்டிபிக் | 15,762.38 |
| 9. | பை பிளக்ஸ் HB (877FABY ஸ்டான்டெட் IOL) | மெடிக்கொன்டோ | 14,342.22 |
| 10. | பனி HP | ஹனிட்டா மார்க்கடிங் | 13,990.70 |
| 11. | I - ஸ்டிரீம் பிறிலோடட் | MD டெக் | 11,902.64 |
| 12. | ஒரோவியு EV | ஒரோலப் | 7,965.56 |
| 13. | அக்றிசொப் SP SA60AT காட்றிச்சுடன் | அல்கொன் | 21,091.50 |
| 14. | அக்றிசொப் எகஸ்பான்ட் MA60MA காட்றிச்சுடன் | அல்கொன் | 21,091.50 |
| 15. | சென்சர் I பீஸ் | அபொட் மெடிக்கல் | 20,592.27 |
| 16. | சென்சர் | அபொட் மெடிக்கல் | 18,912.05 |
| 17. | அக்றிசொப் MP MA60AC | அல்கொன் | 17,210.66 |
| 18. | ஹோயா PY60R | ஹோயா | 12,711.14 |
| 19. | அக்றிவா UD (பிளூ பில்டர்) | VSY பயோடெக் | 11,108.19 |
| 20. | சுப்றா பொப் பிறிலோடட் சிஸ்டம் | அப்பாசாமி | 10,461.38 |
| 21. | அக்றிவா UD | VSY பயோடெக் | 10,545.75 |
| 22. | அக்றியோஸ் - ஆ160 | போஷ் மற்றும் லொம்ப் | 23,812.30 |
| 23. | அக்றியோஸ் AO | போஷ் மற்றும் லொம்ப் | 18,658.95 |
| 24. | அக்றியோஸ் அடப்ற் | போஷ் மற்றும் லொம்ப் | 17,435.64 |
| 25. | பனி AFM | ஹனிட்டா மார்க்கடிங் | 17,084.12 |
| 26. | CT அஸ்பினா 404 | கார்ல் செய்ஸ் மெடிடெக் | 16,873.20 |
| 27. | CT செபரிஸ் 204 | கார்ல் செய்ஸ் மெடிடெக் | 13,189.22 |
| 28. | பனி AF | ஹனிட்டா மார்க்கடிங் | 11,586.26 |

| | | | |
|---|---|---|---|
| 29. | C- பிளெக்ஸ் அஸ்பெறிக் 970C/920H | றெய்னர் | 9,702.09 |
| 30. | அஸ்பிறா - aAY | ஹியூமன் ஒப்டிக்ஸ் | 9,167.77 |
| 31. | ஒகுவா | VSY பயோடெக் | 6,439.94 |
| 32. | ஒரோபிலெக்ஸ் | ஒரோலப் | 2,896.57 |
| 33. | சீலென்ஸ் | ஹனிட்டா மார்க்கடிங் | 9,976.28 |
| 34. | C- பிளெக்ஸ் IOL (ஸ்பெறிகல் 570C) | றெய்னர் | 8,225.69 |
| 35. | அஸ்பிறா AS | ஹியூமன் ஒப்டிக்ஸ் | 8,366.30 |
| 36. | டெக்சொப்ற் டெற்றா | பிரட்ஹொல்லொவ்ஸ் | 7,733.55 |
| 37. | டெக்சொப்ற் பிலெக்ஸ் | பிரட்ஹொல்லொவ்ஸ் | 7,241.42 |
| 38. | அக்றிபோல்ட் | அப்பாசாமி | 4,921.35 |

EOG 3 - 1012/1

---

ச.வ.பி. 9/2016 (III)

**2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க,**
**தேசியமருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம்**

2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசியமருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 142 ஆம் பிரிவின்கீழ் சுகாதாரஅமைச்சரினால் ஆக்கப்பட்டஒழுங்குவிதிகள்.

கலாநிதி **கெஹெலிய ரம்புக்வெல்ல,**
சுகாதார அமைச்சர்.

கொழும்பு,
2022, மாச்சு 28.

**ஒழுங்குவிதிகள்**

2019 ஆம் ஆண்டு மாச்சு 15 ஆந் திகதிய 2114/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளினாலும் 2021 ஆம் ஆண்டு ஓகத்து 19 ஆந் திகதிய 2241/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளினாலும் திருத்தப்பட்டவாறாக 2017 ஆம் ஆண்டு ஓகத்து 04 ஆந் திகதிய 2030/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க, மருத்துவ உபகரணங்கள் விலைகுறித்தல் ஒழுங்குவிதிகள் இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன:-

(1) அதன் 2 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"2. (1) ஏதேனும் வணிகப்பெயர், மாதிரிகள், அளவுகள் அல்லது பொதியளவுகள் மூலம் விவரிக்கப்பட்டவையும் (இதனகத்துப்பின்னர் "அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றவையும்)

இதற்கான அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்டவையுமான மருத்துவ உபகரணங்களின் அதிகபட்ச சில்லறை விலையானது, இதற்கான அட்டவணையின் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.";

(2) அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களை உடைமையில் வைத்திருக்கின்ற ஓர் உற்பத்தியாளர், இறக்குமதியாளர், வியாபாரி, வழங்குநர், விநியோகிப்பாளர், மருந்தாளர், மருத்துவத்தொழிலர், ஒரு தனியார் மருத்துவ நிறுவனமுட்பட்ட மருத்துவ நிறுவனம், மருந்தகம் அல்லது ஆள், அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலைக்கு மேலாக அல்லது ஒழுங்குவிதி 3 (2) இன் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்படக்கூடியவாறான மீளாய்வு செய்யப்பட்ட சில்லறை விலைக்கு மேலாக அத்தகைய அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களை விற்பனைசெய்தலாகாது, விற்பனைக்கு முனைதலாகாது அல்லது அவற்றுக்காக விதிப்பனவு செய்தலாகாது.";

(2) அதன் 3 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"3. (1) விற்பனை நோக்கத்துக்காக அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களை உடைமையில் வைத்திருக்கின்ற ஒவ்வொரு வியாபாரியும், வழங்குநரும், விநியோகிப்பாளரும், மருந்தாளரும், மருத்துவத்தொழிலரும், ஒரு தனியார் மருத்துவ நிறுவனமுட்பட்ட மருத்துவ நிறுவனமும், மருந்தகமும் அல்லது ஆளும், அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களின் விலையை அதிகபட்ச சில்லறை விலையில் அல்லது மீளாய்வு செய்யப்பட்ட சில்லறை விலையில், இவற்றுள் எவ்விலை குறைவாகவுள்ளதோ அவ்விலையில் பேணுதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்கு விதிகள் வெளியிடப்படும் திகதியன்று இதற்கான அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலைக்குக் குறைவாகவுள்ளதும் 2021 ஆம் ஆண்டு ஒகத்து 19 ஆந் திகதிய 2241/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மருத்துவ உபகரணங்கள் (விலைகுறித்தல்) ஒழுங்குவிதிகளின் கீழானதுமான மீளாய்வு செய்யப்பட்ட சில்லறை விலையொன்றில் எவையேனும் மருத்துவ உபகரணங்களை விற்பனை செய்கின்ற ஓர் உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர், மொத்தமாக இருபத்தொன்பது சதவீதத்தினால் (29%) அத்தகைய மீளாய்வு செய்யப்பட்ட விலையை விகிதாசாரப்படி அதிகரிக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களின் மீளாய்வு செய்யப்பட்ட சில்லறை விலையின் அத்தகைய அதிகரிப்பு, இதற்கான அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையை விஞ்சுதலாகாது.";

(3) அதன் 5 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"5. எவரேனும் உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர், அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களின் வர்த்தகப் பொதியின் மீது அல்லது சுட்டுத்துண்டின் மீது, உற்பத்தி செய்யப்பட்ட அல்லது சந்தையில் கிடைக்கக்கூடியதான கையிருப்பில், இயன்றளவு விரைவாக, இதற்கானஅட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையை அல்லது மீளாய்வு செய்யப்பட்ட சில்லறை விலையை, இவற்றுள் எவ்விலைகுறைவாகவுள்ளதோஅவ்விலையை அச்சிடுதல் அல்லது குறியிடுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அதிகபட்ச சில்லறைவிலை அல்லது மீளாய்வு செய்யப்பட்ட சில்லறை விலை, இவற்றுள் எவ்விலை குறைவாகவுள்ளதோ அவ்விலை, இவ்வொழுங்குவிதிகள் வெளியிடப்படும் திகதியிலிருந்து நாற்பத்தைந்து நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதி முடிவுறு முன்னர் அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களின் வர்த்தகப் பொதியின் மீது அல்லது சுட்டுத்துண்டின்மீது அச்சிடப்படுதல் அல்லது குறியிடப்படுதல் வேண்டும்.";

(4) அதன் 6 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"6. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க,தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 131 ஆம் பிரிவின்கீழ் விளங்கப்படற்பாலவராதலும் வேண்டும்.";

(5) அதன் 7 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

''7. விற்பனை நோக்கத்துக்காக அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களை உடைமையில் வைத்திருக்கின்ற உற்பத்தியாளர், இறக்குமதியாளர், வியாபாரி, வழங்குநர், விநியோகிப்பாளர், மருந்தாளர், மருத்துவத் தொழிலர் ஒவ்வொருவரும், ஒரு தனியார் மருத்துவ நிறுவனம் உட்பட்ட மருத்துவ நிறுவனம், மருந்தகம் ஒவ்வொன்றும் அல்லது ஆள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு சில்லறை விற்பனை நிலையத்திலும் அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களின் அதிகபட்ச சில்லறை விலையை அல்லது மீளாய்வு செய்யப்பட்ட சில்லறை விலையை, இவற்றுள் எவ்விலை குறைவாகவுள்ளதோ அவ்விலையை வெளிக்காட்டி வைத்தல் அவரது அல்லதுஅதன் கடமையாதல் வேண்டும்.'';

(6) அதன் 7 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் புதிய ஒழுங்குவிதியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"8. அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களின் ஏதேனும் வணிகப்பெயர்,மாதிரி, அளவுஅல்லது பொதியளவு மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களின் அத்தகைய வணிகப் பெயரின், மாதிரியின், அளவின் அல்லது பொதியளவின் அதிகபட்ச சில்லறை விலைக்கான அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்படாதவிடத்து, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை, அத்தகைய வணிகப் பெயரில், மாதிரியில், அளவில் அல்லது பொதியளவில் அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களுக்கான விலையை நிர்ணயித்தல் வேண்டும்.';

(7) அதன் 8 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"9. இவ்வொழுங்குவிதிகளில் -

''மருத்துவத் தொழிலர்' என்பது, (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச்சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"ஆள்" என்பது, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஏதேனும் ஆட்கள் குழுவை உள்ளடக்கும்;''; அத்துடன்

"தனியார் மருத்துவ நிறுவனம்' என்பது, 2006 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவுசெய்தல்) சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.'';

(8) அட்டவணையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

**அட்டவணை**

(ஒழுங்குவிதி 2)

| இல. | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| | இனம் | அதிகபட்ச சில்லறை விலை (அசிவி) (இரூ) |
| 1. | வெற்றுஉலோக ஸ்டென்ட் | ரூபா. 38,597.45 |
| 2. | கரையும் மருந்துள்ளடங்கிய ஸ்டென்ட் | ரூபா. 168,732.00 |

*ச.வ.பி. 9/2016 (III)*

**2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம்**

*2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 142 ஆம் பிரிவின்கீழ் சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

கலாநிதி **கெஹெலிய ரம்புக்வெல்ல**,
சுகாதார அமைச்சர்.

கொழும்பு,
2022, மாச்சு 28.

**ஒழுங்குவிதிகள்**

*2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதிய 2114/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் மூலமும் 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆந் திகதிய 2241/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் மூலமும் திருத்தப்பட்டவாறாக, 2018 ஆம் ஆண்டு ஓகத்து 31 ஆந் திகதிய 2086/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2018 ஆம் ஆண்டின் மருத்துவ உபகரணங்கள் (விலைகுறித்தல்) ஒழுங்குவிதிகள் இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன:-*

(1) அதன் 2 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"2. (1) ஏதேனும் வணிகப் பெயர், மாதிரிகள், அளவுகள் அல்லது பொதியளவுகளினால் விவரிக்கப்பட்டவையும் (இதனகத்துப்பின்னர் 'அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்கள்' எனக் குறிப்பீடுசெய்யப்படுகின்றவையும்) இதற்கான அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பெயரிலானவையுமான மருத்துவ உபகரணங்களின் அதிகபட்ச சில்லறை விலையானது, இதற்கான அட்டவணையின் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(2) அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களை உடைமையில் வைத்திருக்கின்ற உற்பத்தியாளர், இறக்குமதியாளர், வியாபாரி, வழங்குநர், விநியோகிப்பாளர், மருந்தாளர், மருத்துவத்தொழிலர் ஒருவர், ஒரு தனியார் மருத்துவ நிறுவனமுட்பட்ட மருத்துவ நிறுவனம், மருந்தகம் ஒன்று அல்லது ஆள் ஒருவர், அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலைக்கு மேலாக அல்லது 3(2) ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்படக்கூடியவாறான மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறை விலைக்கு மேலாக அத்தகைய அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களை விற்பனைசெய்தலாகாது, விற்பனைக்கு முனைதலாகாது அல்லது அவற்றுக்காக விதிப்பனவுசெய்தலாகாது.';

(2) அதன் 3 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"3. (1) விற்பனை நோக்கத்துக்காக அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களை உடைமையில் வைத்திருக்கின்ற ஒவ்வொரு வியாபாரியும், வழங்குநரும், விநியோகிப்பாளரும், மருந்தாளரும், மருத்துவத்தொழிலரும், ஒரு தனியார் மருத்துவ நிறுவனமுட்பட்ட மருத்துவ நிறுவனமும், மருந்தகமும் அல்லது ஆளும், அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபாயங்களின் விலையை அதிகபட்ச சில்லறை விலையில் அல்லது மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறை விலையில், இவற்றுள் எவ்விலை குறைவாகவுள்ளதோ அவ்விலையில் பேணுதல் வேண்டும்.';

(2) இவ்வொழுங்குவிதிகள் வெளியிடப்படும் திகதியன்று, இதற்கான அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலைக்குக் குறைவாகவுள்ளதும் 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆந் திகதிய 2241/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மருத்துவ உபகரணங்கள் (விலைகுறித்தல்)

ஒழுங்குவிதிகளின்கீழானதுமான மீளாய்வு செய்யப்பட்டவொரு சில்லறை விலையில் எவையேனும் மருத்துவ உபகரணங்களை விற்பனைசெய்கின்ற ஓர் உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர், மொத்தமாக இருபத்தொன்பது சதவீதத்தினால் (29%) அத்தகைய மீளாய்வு செய்யப்பட்ட சில்லறை விலையை விகிதாசாரப்படி அதிகரிக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களின் மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறை விலையின் அத்தகைய அதிகரிப்பு, இதற்கான அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையை விஞ்சுதலாகாது.";

(3) அதன் 5 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"5. எவரேனும் உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர், அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களின் வர்த்தகப் பொதியின் மீது அல்லது சுட்டுத்துண்டின் மீது, உற்பத்திசெய்யப்பட்ட அல்லது சந்தையில் கிடைக்கக்கூடியதான கையிருப்பில், இயன்றளவு விரைவாக, இதற்கான அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையை அல்லது மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறை விலையை, இவற்றுள் எவ்விலை குறைவாகவுள்ளதோ அவ்விலையை அச்சிடுதல் அல்லது குறியிடுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அதிகபட்ச சில்லறை விலை அல்லது மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறை விலை, இவற்றுள் எவ்விலை குறைவாகவுள்ளதோ அவ்விலை, இவ்வொழுங்குவிதிகள் வெளியிடப்படும் திகதியிலிருந்து நாற்பத்தைந்து நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதி முடிவுறுமுன்னர் அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களின் வர்த்தகப் பொதியின்மீது அல்லது சுட்டுத்துண்டின்மீது அச்சிடப்படுதல் அல்லது குறியிடப்படுதல் வேண்டும்.";

(4) அதன் 6 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"6. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 131 ஆம் பிரிவின்கீழ் விளங்கப்படற்பாலவராதலும் வேண்டும்.";

(5) அதன் 7 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"7. விற்பனை நோக்கத்துக்காக அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களை உடைமையில் வைத்திருக்கின்ற உற்பத்தியாளர், இறக்குமதியாளர், வியாபாரி, வழங்குநர், விநியோகிப்பாளர், மருந்தாளர், மருத்துவத்தொழிலர் ஒவ்வொருவரும், ஒரு தனியார் மருத்துவ நிறுவனம் உட்பட்ட மருத்துவ நிறுவனம், மருந்தகம் ஒவ்வொன்றும் அல்லது ஆள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு சில்லறை விற்பனை நிலையத்திலும் அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களின் அதிகபட்ச சில்லறை விலையை அல்லது மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறை விலையை, இவற்றுள் எவ்விலை குறைவாகவுள்ளதோ அவ்விலையை வெளிக்காட்டிவைத்தல் அவரது அல்லது அதன் கடமையாதல் வேண்டும்.";

(6) அதன் 8 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"8. அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களின் ஏதேனும் வணிகப் பெயர், மாதிரி, அளவு அல்லது பொதியளவு மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களின் அத்தகைய வணிகப் பெயரின், மாதிரியின், அளவின் அல்லது பொதியளவின் அதிகபட்ச சில்லறை விலை இதற்கான அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்படாதவிடத்து, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை, அத்தகைய வணிகப் பெயரில், மாதிரியில், அளவில் அல்லது பொதியளவில் அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களுக்கான விலையை நிர்ணயித்தல் வேண்டும்.";

(7) "மருத்துவத்தொழிலர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்து "ஆள்" என்னும் சொல்லமைப்பின் பதத்திற்கான வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"ஆள்" என்பது, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஏதேனும் ஆட்கள் குழுவை உள்ளடக்கும்;"; அத்துடன்

*(8)* அட்டவணையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுக:-

**அட்டவணை**

**தெரிவு செய்யப்பட்ட இரண்டு மருத்துவ உபகரணங்களின் அதிகபட்ச சில்லறை விலைகள்**

(ஒழுங்குவிதி 2)

| இல. | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட பெயர் | அலகொன்றுக்கு அதிகபட்ச சில்லறை விலை (அசிவி) (இரு) |
| 1. | இரத்த குளுக்கோசு அளவீட்டு மானி | ஓர் அலகுக்கு 4,429.22 |
| 2 | இரத்த குளுக்கோசு அளவீட்டு மானிக்கான சோதனை கீற்றுகள் | ஒரு கீற்றுக்கு 80.15 |

EOG 3 - 1012/3

---

ச.வ.பி. 9/2016 (III)

**2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம்**

*2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 142 ஆம் பிரிவின்கீழ் சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

கலாநிதி **கெஹெலிய ரம்புக்வெல்ல,**
சுகாதார அமைச்சர்.

கொழும்பு,
2022, மாச்சு 28.

**ஒழுங்குவிதிகள்**

2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் 04 ஆந் திகதிய 2243/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மருத்துவ (மருத்துவ உபகரணங்களுக்கு விலைகுறித்தல்) ஒழுங்குவிதிகள் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றன:-

(1) அதன் 2 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"2. (1) ஏதேனும் வணிகப் பெயர், மாதிரிகள், அளவுகள் அல்லது பொதியளவுகளின் மூலம் விவரிக்கப்பட்டதும் (இதனகத்துப்பின்னர் 'அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணம்' எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றதும்) இதற்கான அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பெயரிலானதுமான மருத்துவ உபகரணத்தின் அதிகபட்ச சில்லறை விலையானது, இதற்கான அட்டவணையின் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.';

(2) அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணத்தை உடைமையில் வைத்திருக்கின்ற ஓர் உற்பத்தியாளர், இறக்குமதியாளர், வியாபாரி, வழங்குநர், விநியோகிப்பாளர், மருந்தாளர், மருத்துவத்தொழிலர், ஒரு தனியார் மருத்துவ நிறுவனமுட்பட்ட மருத்துவ நிறுவனம், மருந்தகம் அல்லது ஆள், அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலைக்கு மேலாக அல்லது இந்த ஒழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (4) இன்

ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்படக்கூடியவாறான மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறை விலைக்கு மேலாக அத்தகைய அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணத்தை விற்பனைசெய்தலாகாது, விற்பனைக்கு முனைதலாகாது அல்லது அதற்காக விதிப்பனவுசெய்தலாகாது.';

(3) விற்பனை நோக்கத்துக்காக அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணத்தை உடைமையில் வைத்திருக்கின்ற ஒவ்வொரு வியாபாரியும், வழங்குநரும், விநியோகிப்பாளரும், மருந்தாளரும், மருத்துவத்தொழிலரும், ஒரு தனியார் மருத்துவ நிறுவனமுட்பட்ட மருத்துவ நிறுவனமும், மருந்தகமும் அல்லது ஆளும், அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணத்தின் விலையை அதிகபட்ச சில்லறை விலையில் அல்லது மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறை விலையில், இவற்றுள் எவ்விலை குறைவாகவுள்ளதோ அவ்விலையில் பேணுதல் வேண்டும்.';

(4) இவ்வொழுங்குவிதிகள் வெளியிடப்படும் திகதியன்று, இதற்கான அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலைக்குக் குறைவாகவுள்ளதும் 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் 04 ஆந் திகதிய 2243/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மருத்துவ (மருத்துவ உபகரணங்களுக்கு விலைகுறித்தல்) ஒழுங்குவிதிகளின் கீழானதுமான மீளாய்வுசெய்யப்பட்டவொரு சில்லறை விலையில் ஏதேனும் மருத்துவ உபகரணத்தை விற்பனைசெய்கின்ற ஓர் உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர், மொத்தமாக இருபத்தொன்பது சதவீதத்தினால் (29%) அத்தகைய மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறை விலையை விகிதாசாரப்படி அதிகரிக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணத்தின் மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறை விலையின் அத்தகைய அதிகரிப்பு, இதற்கான அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையை விஞ்சுதலாகாது.';

(2) அதன் 3 ஆம், 4 ஆம் ஒழுங்குவிதிகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"3. எவரேனும் உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர், அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணத்தின் வர்த்தகப் பொதியின் மீது அல்லது சுட்டுத்துண்டின் மீது, உற்பத்தி செய்யப்பட்ட அல்லது சந்தையில் கிடைக்கக்கூடியதான கையிருப்பில், இயன்றளவு விரைவாக, இதற்கான அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையை அல்லது மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறை விலையை, இவற்றுள் எவ்விலை குறைவாகவுள்ளதோ அவ்விலையை அச்சிடுதல் அல்லது குறியிடுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அதிகபட்ச சில்லறை விலை அல்லது மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறை விலை, இவற்றுள் எவ்விலை குறைவாகவுள்ளதோ அவ்விலை, இவ்வொழுங்குவிதிகள் வெளியிடப்படும் திகதியிலிருந்து நாற்பத்தைந்து நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதி முடிவுறுமுன்னர் அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணத்தின் வர்த்தகப் பொதியின்மீது அல்லது சுட்டுத்துண்டின்மீது அச்சிடப்படுதல் அல்லது குறியிடப்படுதல் வேண்டும்.";

(3) அதன் 6 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"6. விற்பனை நோக்கத்துக்காக அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணத்தை உடைமையில் வைத்திருக்கின்ற உற்பத்தியாளர், இறக்குமதியாளர், வியாபாரி, வழங்குநர், விநியோகிப்பாளர், மருந்தாளர், மருத்துவத்தொழிலர் ஒவ்வொருவரும், ஒரு தனியார் மருத்துவ நிறுவனம் உட்பட்ட மருத்துவ நிறுவனம், மருந்தகம் ஒவ்வொன்றும் அல்லது ஆள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு சில்லறை விற்பனை நிலையத்திலும் அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணத்தின் அதிகபட்ச சில்லறை விலையை அல்லது மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறை விலையை, இவற்றுள் எவ்விலை குறைவாகவுள்ளதோ அவ்விலையை வெளிக்காட்டிவைத்தல் அவரது அல்லது அதன் கடமையாதல் வேண்டும்.";

(4) அதன் 8 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"8. அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணத்தின் ஏதேனும் வணிகப் பெயர், மாதிரி, அளவு அல்லது பொதியளவு மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணத்தின் அத்தகைய வணிகப் பெயரின், மாதிரியின், அளவின் அல்லது பொதியளவின் அதிகபட்ச சில்லறை விலை இதற்கான அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்படாதவிடத்து,

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை, அத்தகைய வணிகப் பெயரில், மாதிரியில், அளவில் அல்லது பொதியளவில் அட்டவணைப்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணத்துக்கான விலையை நிர்ணயித்தல் வேண்டும்.';

(5) அதன் 9 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"9. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 131 ஆம் பிரிவின்கீழ் விளங்கப்படற்பாலவராதலும் வேண்டும்.";

(6) அதன் 10 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"10. இவ்வொழுங்குவிதிகளில் -

'மருத்துவத்தொழிலர்' என்பது, (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச்சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"ஆள்" என்பது, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஏதேனும் ஆட்கள் குழுவை உள்ளடக்கும்;"; அத்துடன்

'தனியார் மருத்துவ நிறுவனம்' என்பது, 2006 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவுசெய்தல்) சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**அட்டவணை**

**தெரிவு செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்களின் அதிகபட்ச சில்லறை விலை**

(ஒழுங்குவிதி 2)

| இல. | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட பெயர் | அலகொன்றுக்கு அதிகபட்ச சில்லறை விலை (அசிவி) (இரு) |
| 1. | பல்ஸ் ஒக்சிமீட்டர் | ரூபா 3870.00 |

EOG 3 - 1012/4

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.